


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351




வியாழன் ❖ ஜுன். 08, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 244 ❖ ரூ.10

பட்டியலின மக்களை அனுமதிக்காத திரௌபதி அம்மன் கோயிலுக்கு சீல்

# முன்னெச்சரிக்கை

## தொடர்ந்து பதற்றம் நிலவுவதால், கிராமத்துக்குள் போலீஸார் குவிப்பு இரு தரப்பினரும் நாளை விசாரணைக்கு ஆஜராகி விளக்கத்தினை அளித்திட மாவட்ட கலெக்டர் உத்தரவு

விழுப்புரம் , ஜூன், 8-

**பட்டியலினத்தவரை அனுமதிக்காத விழுப்புரம் - திரௌபதி அம்மன் கோயிலுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன், வெளி ஆட்கள் கிராமத்தில் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது.**



விழுப்புரம் அருகே மேல்பாதி கிராமத்தில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான தர்மா ராஜா திரௌபதி அம்மன் கோயில் உள்ளது. இந்தக் கோயிலில் பட்டியலின மக்கள் கடந்த மாதம் 7-ம் தேதி மாலை தேர்த்திருவிழாவின்போது கோயிலுக்கு சென்றுள்ளனர். இதனால், பட்டியலின மக்கள் மீது ஒரு தரப்பினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. இதனால், அன்று இரவு விக்கிரவாண்டி - கும்பகோணம் சாலையில் பட்டியலின மக்கள் சாலை மறியலில் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்த வளவனூர் காவல் துறையினர் விசாரணை மேற்கொண்டனர்.

சுமார் ஒரு மாதத்துக்கு மேலாக நீடித்து வரும் பிரச்சினை தொடர்பாக விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன் தலைமையில் 5 முறை அமைதிக் கூட்டம் போடப்பட்டும் சுமூகத் தீர்வு ஏற்படவில்லை. அதனைத் தொடர்ந்து ஆட்சியர் பழனி தலைமையில் எம்.பி மற்றும் எம்எல்ஏ-க்கள் முன்னிலையில் இரு தரப்பினரையும் தனித்தனியாக அழைத்து பேசியபோதும் அமைதிக் கூட்டத்தில் சுமூகத் தீர்வு ஏற்படவில்லை. ஒரு தரப்பினர் கோயிலுக்குள் நுழைய விடமாட்டோம் என்று கூறி அறவழிப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக விடுதலை சிறுத்தைகள் கட்சி பொதுச்செயலாளர் ரவிக்குமார் எம்.பி தலைமையில் கடந்த வாரம் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ரவிக்குமார் எம்.பி தலைமையில் ஆட்சியர், எஸ்பியிடம் மனுவாக அளித்திருந்தனர். அதில், 'பொது இடத்தில் நுழைவதை யாரும் தடுக்க முடியாது. எவர் ஒருவரையும் பொது இடத்தில் நுழைய விடாமல் தடுப்பது சட்டப்படி குற்றமாகும். அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 15-ல் அது தெளிவாக்கப் பட்டுள்ளது. அதுபோலவே அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 17 தீண்டாமையைக் கடைப்பிடிப்பதைக் குற்றம்' என அறிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து திருக்கோயில்களிலும் இந்துக்கள் அனைவரும் தடையின்றி வழிபடுவதை உறுதி செய்துள்ளது. மேல்பாதி கோயில் பிரச்சினையில் சமத்தவத்தை நிலைநாட்டுவதை மாவட்ட நிர்வாகம் உறுதி செய்திடவும், இல்லையென்றால் அனைத்துக் கட்சி சார்பில் போராட்டம் நடத்தப்படும்' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், மேல்பாதி கோயில் விவகாரத்தில் இரு தரப்பினருக்கிடையே சுமூக தீர்வு ஏற்படாத நிலையில், கோயிலை பூட்டி சீல் வைக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது. இதற்காக 700 போலீஸார் அக்கிராமத்தில் குவிக்கப்பட்டனர். அதன்படி நேற்று காலை 6 மணிக்கு விழுப்புரம் வருவாய்கோட்டாட்சியர் ரவிச்சந்திரன் தலைமையில் வருவாய்துறையினர் போலீஸ் பாதுகாப்புடன் கோயிலை பூட்டி சீல் வைத்துள்ளார். தொடர்ந்து அங்கு பதற்றம் நிலவுவதால், கிராமத்துக்குள் போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். மேலும், மாவட்டத்தில் பிரச்சினைகள் ஏற்படக்கூடிய கிராமங்களிலும் போலீசார் பாதுகாப்பு பணியில்ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக விக்கிரவாண்டி முதல் கோலியனூர் வரை தேசிய நெடுஞ்சாலையில் காலை 6 மணி முதல் 7 மணி வரை போக்குவரத்து தடை செய்யப்பட்டு, வாகனங்கள் மாற்று வழியில் திருப்பிவிடப்பட்டது. மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வஜ்ரா வாகனம், தீயணைப்பு வாகனம், ஆம்புலன்ஸ், வெளி மாவட்ட போலீஸார் என மாவட்ட நிர்வாகம் திடிரென ஏற்படும் அசம்பாவிதங்களை சமாளிக்கதயார் நிலையில் இருந்தது.

### இருதரப்பினரும் விசாரணைக்கு ஆஜராக ஆட்சியர் உத்தரவு

இது தொடர்பாக விழுப்புரம் ஆட்சியர் பழனி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், "மேல்பாதி திரௌபதி அம்மன் கோயிலில் வழிபாடு செய்வது தொடர்பாக இரு தரப்பினர்களிடையே கடந்த ஏப்ரல் 7-ம் தேதி ஏற்பட்ட பிரச்சினை தொடர்பாக, இரு தரப்பினர்களிடையேயும் கோட்டாட்சியர், ஆட்சியரால் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும் சுமுகமான தீர்வு ஏற்படவில்லை.

எனவே, கோயில் வழிபாட்டில் ஒரு அசாதாரண சூழ்நிலை நிலவுவதாலும், இதனால் பொது அமைதியை பாதுகாத்திடும் வகையில் ஸ்ரீ தர்மராஜா திரௌபதி அம்மன் கோயிலுக்குள் பிரவேசிக்கக் கூடாத என தீர்மானித்து குற்றவியல் முறை சட்டப்பிரிவு 145-ன் கீழ் வருவாய் கோட்டாட்சியரால் விளம்புகை செய்யப்பட்டுள்ளது. மேலும், பாதுகாப்பு காரணங்களுக்காக கோயில் மூடி சீலிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கோட்டாட்சியர் அலுவலகத்தில் இரு தரப்பினரும் நாளை (ஜூன் 9) காலை 10 மணிக்கு விசாரணைக்கு ஆஜராகி தங்கள் தரப்பு எழுத்துபூர்வமான விளக்கத்தினை உரிய ஆவணங்களுடன் அளித்துக் கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் 2-ம் கட்ட விசாரணை செய்யப்பட்டு இறுதி முடிவு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது" என்று அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

கருணாநிதி நூற்றாண்டு விழாவையொட்டி

# 5 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை , ஜூன், 8-

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவையொட்டி 5 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மரக்கன்று நட்டு நேற்று (ஜூன் 7) தொடங்கி வைத்தார். இந்நிகழ்வு சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் நடந்தது.



"மரத்தை நாம் வளர்த்தால் மரம் நம்மை வளர்க்கும்" என்ற கருணாநிதியின் சொல்லுக்கு இணங்க, அவரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாநில நெடுஞ்சாலைகளிலும் 5 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும் என்றும், இதனால் மாநில நெடுஞ்சாலைகளில் இடைவெளி இல்லாமல் மரங்கள் வளர்க்கப்படும் என்ற இலக்கு எட்டப்படும் என்றும் 2023-2024ம் ஆண்டு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை மானியக்கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்புக்கு இணங்க, மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா தொடக்க நாளான நேற்று (7.6.2023) தமிழக முதல்வர், சென்னை கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், 5 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை மரக்கன்று நட்டு வைத்து தொடங்கி வைத்தார்.

இன்றைய தினம் தமிழகமெங்கும் நெடுஞ்சாலைதுறையின் 340 சாலைகளில் நடப்படவுள்ள மகிழம், வேம்பு, புளியன், புங்கன், நாவல், சரக்கொன்றை போன்ற வகையைச் சார்ந்த சுமார் 46,410 மரக்கன்றுகள், 24 மாத காலம் வளர்ச்சிக் கொண்டவையாகும். மேலும், பருவமழைக்கு முன்பாகவே 5 லட்சம் மரக்கன்றுகளையும் நடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் க.பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைகூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்ட இயக்குநர் அண்ணாதுரை, நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு தலைமைப்பொறியாளர் இரா. சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

# மீமிசலில் ஆற்றங்கரை ஓரம் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும் : பொதுமக்கள் கோரிக்கை

ஆவுடையார்கோவில் ஜூன் 8

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகாவில் உள்ள கொழுவநாற்றின் இரண்டு கரைகளும் தொடர்ச்சியாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் மீமிசல் பகுதியில் ஆறு கடலில் கலக்கும் பகுதியை சிலர் வேண்டுமென்றே திட்டமிட்டு ஆக்கிரப்பு செய்து வீடுகட்டி வருகிறார்கள்.




பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள ஆற்றங்கரைகளை ஆக்கிரமிப்பு செய்வதால் ஆற்றில் தண்ணீர் வருகின்ற நேரங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து கிராமங்களுக்குள் சென்று பெரும் சேதத்தை ஏற்படுத்துகிறது. எனவே பொதுப்பணித்துறை ஆற்றின் இரண்டு கறைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றப்பட வேண்டும் என்பது மீமிசல் மற்றும் சுற்று வட்டார பகுதியில் உள்ள பொதுமக்களின் நீண்ட கால கோரிக்கையாக இருக்கிறது. அரசு நடவடிக்கை எடுக்குமா? என்ற கேள்வியும் எழும்பிகிறது.

---

டீக்கடையில் டீ, பிரட் ஆம்லேட், குடித்துவிட்டு பணம் தர மறுத்து

# வாக்குவாதத்தில் ஈடுபட்ட பெண் இன்ஸ்பெக்டர் உட்பட 4 பேரை பணியிடை நீக்கம் செய்து தாம்பரம் கமிஷனர் உத்தரவு

காஞ்சிபுரம், ஜூன், 8-

காஞ்சிபுரம் மாவட்டம் படப்பையில் ஜூஸ் கடை ஒன்றில் பிரெட் ஆம்லெட் , ஜூஸ், சாக்லெட் போன்றவற்றை ஓசியில் கேட்டு தகராறில் ஈடுபட்டதாக எழுந்த புகாரில் மகளிர் காவல் ஆய்வாளர் உள்ளிட்ட 4 காவலர்களை பணியிடை நீக்கம் செய்து தாம்பரம் கமிஷனர் அமல்ராஜ் உத்தரவு அளித்துள்ளார்.



கூடுவாஞ்சேரி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருபவர் விஜயலட்சுமி. அதே காவல் நிலையத்தில் ஜெயமாலா உள்ளிட்ட 4 பேர் காஞ்சிபுரம் மாவட்டம் படைப்பை பகுதியில் உள்ள ஜூஸ் கடைக்கு சென்றுள்ளனர். அப்போது ரோந்து பணியிலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்தநிலையில் அந்த கடைக்கு சென்றபோது 4 காவலர்களும் அந்த விற்பனையாளர்களிடம் காவல் ஆய்வாளர் ஜெயலட்சுமி உள்ளிட்ட காவலர்கள் 4 பேர் பிரெட் ஆம்லெட் , ஜூஸ், சாக்லெட், குடிநீர் பாட்டில் போன்றவற்றை ஓசியில் கேட்டு தகராறில் ஈடுபட்டனர். கடை விறபனையாளர் அவர்கள் கேட்ட பொருளை தர மறுத்துள்ளார்.

இதன்பிறகு அந்த கடையில் பணிபுரியும் விற்பனையாளரிடம் கடையின் உரிமையாளர்களுக்கு போன் செய்து கொடு என்று கேட்டுள்ளார். அவரும் போன் செய்து கொடுத்துள்ளார். அப்போது வந்த கடையின் உரிமையாளரிடம் நாங்கள் உங்களுக்காக தான வேலை செய்கிறோம் எங்களுக்கு இந்த பொருள் கூட தரமாட்டியா என்றும் நீ தரும் பொருள் இன்ஸ்பெக்டர் தான கொடுக்க போற உன்னோட கடையின் உரிமத்தை ரத்து செய்து விடுவேன் என்றும் உரிமையாளரை கவலை நிலையத்தில் வந்து அதிகாரிகளை பார்க்க சொல்லியும் போனில் மிரட்டியுள்ளார்.

இதன் பிறகு சிசிடிவி பதிவில் பதிவான காட்சிகளை கொண்டு கடையின் உரிமையாளர் தாம்பரம் கமிஷ்னர் அலுவலகத்தில் விஜயலட்சுமி, ஜெயமாலா உள்ளிட்ட 4 பேரின் மீது புகார் அளித்துள்ளார். இந்த புகாரின் அடிப்படையில் விஜயலட்சுமி, ஜெயமாலா உள்ளிட்ட 4 காவலர்களையும் சஸ்பெண்ட் செய்து கமிஷனர் அமல்ராஜ் உத்தரவு அளித்துள்ளார்.

---

# உ.பி – லக்னோ நீதிமன்றத்தில் பிரபல ரவுடி சஞ்சீவ் ஜீவா சுட்டுக் கொலை

லக்னோ , ஜூன், 8-

உத்தரப் பிரதேசத் தலைநகர் லக்னோவில் உள்ள சிவில் நீதிமன்றத்துக்கு விசாரணைக்காக வந்த ரவுடி சஞ்சீவ் ஜீவா சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப் பிரதேசத்தின் பிரபல ரவுடிகளில் ஒருவரான சஞ்சீவ் ஜீவா மீது பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளன. உள்ளூர் பாஜக தலைவர் பிராம் தத் திவேதி கொலை வழக்கிலும் சஞ்சீவ் ஜீவா குற்றம் சாட்டப்பட்டுள்ளார். சிறையில் இருந்த சஞ்சீவ் ஜீவா, வழக்கு விசாரணைக்காக லக்னோ சிவில் நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டார். நீதிமன்ற வளாகத்தில் அவர் வந்து கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபரால் அவர் சுடப்பட்டார். சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

இதையடுத்து, நீதிமன்ற வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. போலீசாரைக் கண்டித்து வழக்கறிஞர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். தகவல் அறிந்து லக்னோ மேற்கு துணை காவல் ஆணையர், லக்னோ மத்தி துணை காவல் ஆணையர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

இந்தச் சம்பவம் குறித்துப் பேசிய சட்டம் - ஒழுங்கு இணை ஆணையர் உபேந்திர குமார் அகர்வால், "குற்றவாளி சஞ்சீவ் குமார் சுடப்பட்டுள்ளார். மேலும், அவரை நீதிமன்றத்துக்கு அழைத்து வந்த 2 காவல் துறை அதிகாரிகளும், ஒரு குழந்தையும் காயமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்" என தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து கருத்து தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், "இதுதான்



ஜனநாயகமா? ஒருவர் யாரால் கொல்லப்பட்டார் என்பது அல்ல முக்கிய கேள்வி. ஒருவர் கொல்லப்படுகிறார் என்றால் பாதுகாப்பு இருக்கிறதா, சட்டம் - ஒழுங்கு இருக்கிறதா என்பதுதான் முக்கிய கேள்வி" என தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள உத்தரப் பிரதேச துணை முதல்வர் கேசவ பிரசாத் மவுர்யா, "இதுபற்றி எனக்குத் தெரியாது. அதேநேரத்தில் இந்தக் கொலை சம்பவத்தில் தொடர்புடையவர்கள் மீது காவல் துறை கடும் நடவடிக்கை எடுக்கும். அவர்கள் ஒருபோதும் தப்பிக்க முடியாது" என கூறியுள்ளார்.


யார் இந்த சஞ்சீவ் ஜீவா? - சஞ்சீவ் மகேஷ்வரி என்கிற சஞ்சீவ் ஜீவா மேற்கு உத்தரப்பிரதேசத்தின் மிக முக்கிய ரவுடியாக இருந்துள்ளார். ரவுடியாக இருந்து அரசியல்வாதியாக மாறிய முக்தர் அன்சாரியின் கூட்டாளி இவர். கடந்த 2028-ல் பக்பத் சிறையில் இருந்த முன்னா பஜ்ரங்கி கொலைக்குப் பிறகு இவர் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கூறி இருந்தார்.

பாஜக எம்எல்ஏ கிருஷ்ணானந்த் ராய் கொலை வழக்கில் இவருக்கு தொடர்பு உள்ளதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. லக்னோ சிறையில் அடைக்கப்பட்ட சஞ்சீவ் ஜீவா, வழக்கு விசாரணைக்காக இன்று லக்னோ சிவில் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட நிலையில் அடையாளம் தெரியாத நபரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# நீலகிரி மலை ரயிலில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி குடும்பத்தினருடன் பயணம்

உதகை , ஜூன். 8-

நீலகிரி மாவட்டம் உதகை ராஜ்பவனில் நடந்த, துணை வேந்தர்கள் மாநாட்டை தொடங்கி வைக்க கடந்த, 3ம் தேதி இரவு ஆளுநர் ரவி, உதகை வந்தார். 5 ம் தேதி துணை வேந்தர்கள் மாநாட்டை தொடங்கி வைத்தார்.



பின், உலக சுற்றுசூழல் தினத்தையொட்டி மனைவி லக்ஷ்மியுடன் ராஜ்பவன் வளாகத்தில் இரண்டு மரக்கன்றுகளை நடவு செய்தார். இந்நிலையில், நேற்று ( ஜூன் 7 ) ஆளுநர் ரவி மனைவி லக்ஷ்மியுடன் உதகை ரயில் நிலையத்திலிருந்து மலை ரயில் மூலம், குன்னூர் சென்றார். உதகை குன்னூர் இடையே கேத்தி பள்ளத்தாக்கின் இயற்கை காட்சி, படகு இல்லம் குகை உள்ளிட்டவற்றை கடந்து ரயில் சென்றதை பார்த்து பரவசமடைந்தார்.

ரயில் குன்னூர் ரயில் நிலையத்தை வந்தடைந்தது. குன்னூரில் உள்ள பிரபல தனியார் ஹோட்டலில் மதிய உணவு சாப்பிட ஆளுநர் குன்னூரில் இருந்து கார் மூலம் உதகை ராஜ்பவன் வந்தார். முன்னதாக, உதகை ரயில் நிலையம் வந்த ஆளுநர் ரவியை ரயில்வே உதவி இயக்குநர் சரவணன் புத்தகம் கொடுத்து வரவேற்றார்.

ஆளுநர் மலை ரயிலில் செல்வதையொட்டி மோப்ப நாய் மூலம் ரயில் தண்டவாளங்கள், ரயில் நிலையங்களை சோதனையிட்டு, பின், ரயிலில் செல்லும் சுற்றுலா பயணிகளை சோதனைக்கு பின் அனுமதித்தனர்.

# மல்யுத்த வீராங்கனைகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்த அமைச்சர் அனுராக் தாக்கூர்

புதுடெல்லி , ஜூன். 8-

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது பாலியல் குற்றச்சாட்டு கூறி போராடி வரும் மல்யுத்த வீராங்கனைகளை மத்திய விளைடாட்டுத் துறை அமைச்சர் அனுராக் தாக்கூர் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார்.

இது தொடர்பாக நள்ளிரவில் அனுராக் பதிவு செய்த ட்வீட்டில், "மல்யுத்த வீராங்கனைகளின் பிரச்சினைகள் குறித்து அவர்களுடன் ஆலோசிக்க அரசு தயாராக உள்ளது. நான் மீண்டும் அவர்களுக்கு இதுதொடர்பாக அழைப்பு விடுக்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.



முன்னதாக கடந்த சனிக்கிழமை இரவு உள்துறை அமைச்சர் அமித்ஷாவை மல்யுத்த வீரர்கள் வீராங்கனைகள் சந்தித்தனர். இரவு 11 மணிக்கு மேல் சுமார் 1 மணி நேரம் அந்த சந்திப்பு நடந்தது. சாக்ஷி மாலிக், சங்கீதா போகத், சத்யவர்த் காடியான் மற்றும் வீரர் பஜ்ரங் புனியா அகியோர் அமைச்சரை சந்தித்தனர்.

விளையாட்டுத் துறை அமைச்சர் வீராங்கனைகளை மீண்டும் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார்.

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது ஒரு மைனர் பெண் உள்பட 7 வீராங்கனைகள் பாலியல் புகார் கூறியுள்ளனர். பிரிஜ் பூஷன் சிங் பதவி விலக வேண்டும் அவரை டெல்லி போலீஸார் கைது செய்ய வேண்டும் என்று போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த ப் போராட்டத்தினைத் தொடர்ந்து பிரிஜ் பூஷன் மீது 2 பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவர் இதுவரை கைது செய்யப்படவில்லை. அவர் மீதான இரண்டு வழக்குகளில் ஒன்று போக்சோ வழக்கு என்பது குறிப்பிடத்தக்கது.




ஆண்டிமடத்தில் புதிய சுகாதார கட்டிடங்கள் கட்ட கோரிக்கை மனு

# சுகாதார அமைச்சரிடம் ஜெயங்கொண்டம் எம்.எல்.ஏ கண்ணன் வழங்கினார்

*அரியலூர் ஜூன் 8*

*ஆண்டிமடத்தில் புதிய சுகாதார கட்டிடங்கள் கட்ட அமைச்சர் சுப்ரமணியனிடம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கண்ணன் மனு கொடுத்துள்ளார்.*

*இதுபற்றிசென்னையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியனை நேரில் சந்தித்து, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:*



*ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ஆண்டிமடம் வட்டார சமுதாய சுகாதார மையத்தில் உள்ள, புற நோயாளிகள் பிரிவு கட்டிடம், மிகவும் பழுத்தடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது.*

*எனவே ஆண்டிமடம் வட்டார சமுதாய சுகாதார நிலையத்துக்கு அலுவலக கட்டிடம், புறநோயாளிகள் பிரிவு கட்டிடம், திருக்களப்பூர் கிராமத்தில் உள்ள அரசு ஊரக சித்த மருந்தகத்திற்கு புதிய கட்டிடம் ஆகியவற்றை வழங்குவதற்கு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறேன் என்று அதில் கூறப்பட்டுள்ளது.*

*10-ம் மற்றும் 12-ம் வகுப்பு தேர்வில்*

# அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை ஜூன் 17-ம் தேதி நேரில் சந்திக்கிறார் நடிகர் விஜய்

சென்னை, ஜூன். 8-

நடிகர் விஜய்யின், விஜய் மக்கள் இயக்கம் விரைவில் அரசியல் இயக்கமாக மாறும் என்ற எதிர்பார்ப்பு சில ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. இவர் தன் தொண்டர்கள் மூலம் சமூக சேவை பல செய்து வருகிறார்.



இந்நிலையில், 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை நேரில் அழைத்து பாராட்டி, கல்வி உதவித்தொகைய வழங்க உள்ளதாக அறிவிக்கப்பட்டது. மொத்தமுள்ள 234 சட்டசபை தொகுதிகளில் உள்ள 10-ஆம் வகுப்பு மற்றும் 12-ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெற்ற தலா மூன்று மாணவர்கள் வீதம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ - மாணவியருக்கு பரிசு, கல்வி உதவித் தொகை வழங்க விஜய் திட்டமிட்டுள்ளதாக கூறப்பட்டது.

இந்த நிலையில், 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை ஜூன் 17-ந் தேதி நடிகர் விஜய் சந்திக்கிறார் என்று விஜய் மக்கள் இயக்க பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அறிவித்துள்ளார். 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழ்நாடு முழுவதும் தொகுதி வாரியாக முதல் 3 இடங்களை பெற்ற மாணவ மாணவிகளை நேரில் சந்திக்க உள்ளார்.

"ஒரு பிறப்பில் தான் கற்றக் கல்வியானது அப்பிறப்பிற்கு மட்டுமல்லாமல் அவளுக்கு ஏழு பிறப்பிறப்பிலும் உதவும் தன்மை உடையது! "தளபதி விஜய்" அவர்களின் சொல்லுக்கிணங்க, வருகின்ற 17-ம் தேதி அன்று "அகில இந்திய தலைமை தளபதி விஜய் மக்கள் இயக்கம்" சார்பாக சென்னை, நீலாங்கரையில் உள்ள (R.K Convention Centre-ல்) 2023-ஆம் ஆண்டு நடந்து முடிந்த "10 மற்றும் 12-ம்" வகுப்பு பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவ, மாணவிகளுக்கு "தளபதி விஜய்" மாணவ, மாணவிகளின் பெற்றோர்கள் முன்னிலையில் சான்றிதழ்கள் மற்றும் ஊக்கத்தொகை வழங்கி கௌரவப்படுத்த உள்ளார்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாஜகவோடு கூட்டணி வைக்கும் எண்ணம் இல்லை ஹெச்.டி.குமாரசாமி

பெங்களூரு , ஜூன். 8-

பாஜகவோடு கூட்டணி வைக்கும் எண்ணம் இல்லை என்று மதச்சார்பற்ற ஜனதாதளக் கட்சியின் தலைவர் ஹெச்.டி. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளரிடம் பேசிய அவர், "கர்நாடகத்தில் காங்கிரஸ், பாஜக எனும் இரு தேசிய கட்சிகளுக்கும் எதிராகத்தான் எங்கள் கட்சி இருக்கிறது. கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின்போதும் இரு கட்சிகளையும் எதிர்த்துத்தான் தேர்தலை எதிர்கொண்டோம். ஆனால், திடீரென மதச்சார்பற்ற ஜனதா தளம் பாஜவோடு கூட்டணி வைக்கப் போவதாக செய்திகள் வெளியாகின்றன. யார் இவ்வாறு பரப்புகிறார்கள் எனத் தெரியவில்லை.



வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது பாஜகவோடு மதச்சார்பற்ற ஜனதா தளம் கூட்டணி வைக்குமா என கேட்கிறீர்கள். தற்போதைய நிலையில் அதுபோன்ற எந்த யோசனையும் எங்களுக்குக் கிடையாது. யாரிடம் இருந்தும் எங்களுக்கும் அழைப்பு வரவில்லை. கடந்த 20 ஆண்டுகளாகவே நாங்கள் இரண்டு தேசிய கட்சிகளையும் எதிர்த்துத்தான் அரசியல் செய்து கொண்டிருக்கிறோம். தற்போதும் அது அப்படியேதான் தொடருகிறது" என தெரிவித்தார்.

முன்னதாக, ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வரும் தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவருமான ஃபரூக் அப்துல்லா, பெங்களூருவில் முன்னாள் பிரதமர் தேவ கவுடாவைச் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது, குமாரசாமியும் உடன் இருந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ஃபரூக் அப்துல்லா, "ஒடிசா ரயில் விபத்து தொடர்பாக அவசியம் விசாரணை நடத்தப்பட வேண்டும். விபத்தின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பது தெரிய வேண்டும்" என கூறினார்.

# காதலித்ததை தந்தை கண்டித்ததால் சகோதரிகள் கிணற்றில் குதித்து தற்கொலை

*துவரங்குறிச்சி ஜூன் 8*

*திருச்சி அருகே காதலை தந்தை கண்டித்ததால் சகோதரிகள் கிணற்றில் குதித்து தற்கொலை செய்துகொண்டசம்பவம் பெரும் துயரத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சி அருகே அயன் புதுப்பட்டியை சேர்ந்தவர் பிச்சை (65). கட்டிட தொழிலாளி இவருக்கு 3 மகள்கள், 3 மகன்கள் உள்ளனர். இதில் வித்யா (21), காயத்ரி (20). இவர்கள் இருவரும் காங்கேயத்தில் உள்ள தனியார் பஞ்சாலையில் வேலை பார்த்து வந்தனர். திருவிழாவிற்காக கடந்த 5-ம் தேதி இருவரும் புதுப்பட்டிக்கு வந்தனர். இந்நிலையில் வீட்டை விட்டு சென்ற இருவரும் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை.*



*இதையடுத்து குடும்பத்தினர் அவர்களை தேடியபோது, அதே பகுதியில் உள்ள ஒரு கிணற்றில் இருவரது உடல்கள் மிதந்தது தெரியவந்தது.*

*தகவலறிந்த துவரங்குறிச்சி தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இருவரது உடல்களை மீட்டு வெளியே கொண்டு வந்தனர். சம்பவ இடத்திற்கு வந்த வளநாடு போலீசார் , இருவரது உடல்களை மீட்டு மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.*

*இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர். இதில் முதற்கட்ட விசாரணையில், பஞ்சாலையில் வேலை செய்த இரண்டு பேரை, அவர்கள் காதலித்து வந்திருக்கின்றனர். இதையறிந்த தந்தை இரண்டு மகள்களை கண்டித்துள்ளார். இதனால் மனமுடைந்த இருவரும் தற்கொலை செய்து கொண்டது தெரியவந்தது. தற்கொலைக்கு வேறு ஏதும் காரணம் உள்ளதா? என்றும் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.*

# உக்ரைன் அணை தகர்ப்பால் ஆயிரக்கணக்கான மக்கள் தவிப்பு ஐ.நா. கண்டனம்

கீவ் , ஜூன். 8-

உக்ரைனின் அணை தகர்ப்பு ஆயிரக்கணக்கான மக்களை மோசமான விளைவுகளை நோக்கி தள்ளி இருக்கிறது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ரஷ்ய கட்டுப்பாட்டில் உள்ள உக்ரைன் பகுதியில் இருந்த முக்கிய அணையின் ஒருபகுதியை, ரஷ்யபடைகள் குண்டு வீசி தகர்த்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அணையிலிருந்து அதிக அளவில் தண்ணீர் வெளியேறுவதால் உக்ரைனில் உள்ள 10 கிராம மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.




உக்ரைனின் கெர்சன் பகுதியில் டினிப்ரோ ஆற்றின் குறுக்கே, கடந்த 1956-ம் ஆண்டு 98 அடி உயரத்தில், 3.2 கி.மீ நீளத்தில் கக்கோவ்கா அணை கட்டப்பட்டது. இங்கு கக்கோவ்கா நீர்மின் நிலையமும் உள்ளது. கிரிமியன் தீபகற்ப பகுதி, ஜபோரிச்ஜியா அணுமின் நிலையம் ஆகியவற்றுக்கு இந்த அணையிலிருந்துதான் தண்ணீர் விநியோகம் நடைபெறுகிறது.

சோவியத் காலத்தில் கட்டப்பட்ட இந்த அணையை ரஷ்ய ராணுவம் தகர்த்துவிட்டதாகவும், இங்கிருந்து வெளியேறும் தண்ணீர் 5 மணி நேரத்துக்குள் அபாய அளவை எட்டும் என கெர்சன் பகுதி ராணுவ நிர்வாகத் தலைவர் அலெக்சாண்டர் புரோகுதின் கூறியுள்ளார்.

இதனால் தெற்கு உக்ரைனின் கக்கோவ்கா பகுதியில் உள்ள 10 கிராம மக்களை வெளியேற்றும் நடவடிக்கை தொடங்கியுள்ளனர்.

அணையை யார் தாக்கியது என்ற தகவல் உறுதியாகவில்லை. இந்த விவகாரத்தில் ரஷ்யா - உக்ரைன் இருவரும் ஒருவரை ஒருவர் மாறி மாறி குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் இந்த தாக்குதல் குறித்து ஐக்கிய நாடுகள் சபை நிவாரண உதவிகளுக்கான தலைவர் மார்டின் கிரிஃபித்ஸ் பேசும்போது, "ஆயிரக் கணக்கானோர் இப்பகுதியில் வெள்ளம் சூழ்ந்துள்ள வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். மேலும் இப்பகுதியில் நீர்மட்டம் மேலும் உயரும் அபாயம் உள்ளது. மக்கள் தங்களது உடைமைகளை முற்றிலும் இழந்திருக்கிறார்கள்" என்று தெரிவித்தார்.

# கைதிகளின் மறுவாழ்வு மையமாக மாறிய மதுரை மத்திய சிறை

மதுரை , ஜூன். 8-

மதுரை மத்திய சிறை வளாகம் சிறைத்துறை உயர் அதிகாரிகளின் முயற்சியால் கைதிகளின் மறுவாழ்வு மையமாக மாறியுள்ளது. மதுரை மத்திய சிறை வளாகம் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு 1865-ம் ஆண்டில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டது. இங்கு விசாரணை மற்றும் தண்டனைக் கைதிகள் என, சுமார் 1800-க்கும் மேற்பட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளுக்கு தண்டனை அளிக்கும் இடமாக இன்றி, அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் மையமாக தற்போது மதுரை மத்திய சிறை மாறி இருக்கிறது.




தண்டனைக் கைதிகளுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் வகையில் சிறை நிர்வாகம் சார்பில், கணினி மற்றும் பேக்கரி பொருட்கள், சுங்குடி சேலை, கைலி, பெண் கைதிகள் மூலம் குழந்தைகள் விளையாட்டு பொருட்கள், சுடிதார், நைட்டி, வயர் கூடை, வத்தல் பொருட்கள் உள்ளிட்டவை தயாரிக்கும் பல்வேறு தொழில் பயிற்சிகளை அளித்து உற்பத்தி செய்கின்றனர்.

கைதிகள் தயாரிக்கும் பொருட்கள் பொது மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கும் விதமாக சிறை அங்காடி (பிரிசன்-பஜார் ) என்ற திட்டத்தை சிறைத்துறை டிஜிபி அம்ரேஷ் பூஜாரி மேற்கொண்டார். இதன்படி, சிறை அங்காடி எனும் விற்பனை நிலையம் சிறையின் முன்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

மதுரை சிறைத்துறை டிஐஜி பழனி, முன்னாள் கூடுதல் கண்காணிப்பாளர் வசந்தக் கண்ணன் உள்ளிட்டோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

இந்நிலையில், சிறைப் பொருள் விற்பனை நிலையம் கடந்த மாதம் 26-ம் தேதி திறக்கப்பட்டது. மதுரை சிறையில் இருந்து சுங்குடி சேலை, கைலிகள், ரெடிமேட் சட்டைகளும், பேக்கரி பொருட்களும், பெண் கைதிகள் மூலம் குழந்தைகளுக்கான விளையாட்டு, சுடிதார், நைட்டிகள், வயர்கூடை, வத்தல் பொருட்களும் தயாரிக்கப்பட்டு விற்கப்படுகின்றன.

மேலும் கடலூர் , கோவை, சிங்காநல்லூர் திறந்தவெளி சிறை உட்பட தமிழகத்திலுள்ள 10 சிறைகளிலும் கைதிகள் தயாரிக்கும் எண்ணெய் பொருட்கள், போர்வை, காவலர்களுக்கான சீருடை, தொப்பி, இட்லி, பருப்புப் பொடி, ஊறுகாய், தின்பண்டங்கள், வத்தல் போன்ற உணவுப் பொருட்களும் வரவழைத்து விற்க தொடங்கி உள்ளனர். மேலும், காலை சிற்றுண்டியாக இட்லி, தோசை, பொங்கல் மற்றும் காபி, டீயும், மதிய சாப்பாடு விற்கப்படுகிறது.

வாடிக்கையாளர்கள் சிலர் கூறுகையில், 'மதுரை சிறை அங்காடியில் சுத்தம், சுகாதாரமிக்க உணவு பொருட்கள் கிடைக்கின்றன. விலையிலும் நியாயமாக இருக்கிறது. தண்டனைக் காலம் முடிந்து செல்லும் கைதிகளுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்' என்றனர்.

மதுரை மத்திய சிறை டிஐஜி பழனி கூறியதாவது: மதுரை சிறையில் தகுதியான தண்டனைக் கைதிகளை தேர்ந்தெடுத்து, பல்வேறு பொருட்களை உற்பத்தி செய்கிறோம். இதன்படி, பேக்கரி உற்பத்தியில் 12 பேரும், ஹோட்டல் உணவு தயாரிக்க 7 பேர், ஓட்டல் நிர்வாகப் பணிக்கு 10 பேர் மற்றும் துணிகளை தோய்க்கும் பிரிவில் 2 பேர், நர்சரியில் 3 பேர் என 40-க்கும் மேற்பட்டோர் உற்பத்தி பிரிவில் பணி புரிகின்றனர்.

மதுரை அரசு மருத்துவமனைக்கு தினமும் தேவைக்கேற்ப 1,700 ரொட்டி பாக்கெட்டுகளை தயாரித்து அனுப்புகிறோம். மதுரை சிறை அங்காடி மூலம் தினமும் ரூ. 50 முதல் ரூ.60 ஆயிரத்துக்கு விற்பனை நடக்கிறது. மதுரை மட்டுமின்றி பிற சிறைகளில் தயாரிக்கும் பொருட்களும் இங்கு கொண்டு வரப்படுகிறது.

இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 2 லட்சம் விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் ஈடுபடும் கைதிகளுக்கு போதிய வருவாயும் கிடைத்து, அவர்களின் குடும்பத்தினருக்கும் உதவுகின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

தேசிய மாணவர் படை மாணவர்கள் பாய்மரப் படகில் கடல் சாகசப் பயணம்

# 5 ஆம் நாள் பயணத்தை பூம்புகார் துறைமுகத்தில் எம்எல்ஏ நிவேதா.எம். முருகன் துக்கி வைத்தார்




பூம்புகார், ஜூன். 8-

ஜனவரி 2024 அன்று தில்லியில் நடைபெற உள்ள குடியரசு தின விழாவில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு நடத்தப்படும் போட்டிகளில் ஒன்றான கடல் சாகசப் பயணம் குறித்த போட்டிக்கான நிகழ்வாக இந்த நிகழ்வு அமைக்கப்பட்டுள்ளது. கடலூர் 5 தமிழ்நாடு தேசிய மாணவர் படை கப்பல் படை பிரிவு மற்றும் புதுவை 1 தேசிய மாணவர் கப்பல் படை மாணவர்கள் இணைந்து நடத்தும் கடல்சார் பாய்மரப்படகு சாகச பயணம் 2023 ஜூன் 2 ஆம் தேதி காலை தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதில் 25 மாணவிகள் உள்பட 60 தேசிய மாணவர் படை மாணவர்கள் கடல் சாகசப் பாய்மரம் படகு செலுத்தும் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

302 கிலோ மீட்டர் தூரத்தை கடக்கவுள்ள இந்த பாய்மர படகு சாகசப் பயணம் புதுவையில் தொடங்கி கடலூர், பரங்கிப்பேட்டை, பூம்புகார் வழியாக காரைக்கால் சென்றடைந்து மீண்டும் அதே வழியில் திரும்புகின்றனர்.

இந்த கடல் சாகசத்தின் ஐந்தாம் நாள் பயணத்தை பூம்புகார் துறைமுகத்தில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து சாகச குழுவில் பங்கேற்றுள்ள மாணவ,மாணவிகளுக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்த குழுவினர் தாங்கள் செல்லும் இடங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் ரத்த தான முகாம் மரம் நடுதல், கடற்கரை தூய்மைப் பணித் திட்டம் எனப் பல சமூக சேவை சார்ந்த நிகழ்வுகளை நடத்த உள்ளனர்.

தேசிய மாணவர் படை மாணவர்களின் உள்ளத் திறன் மேம்படுவதோடு கடல் பயணம் குறித்த அச்சம் நீங்கி ஆயுதப் படையில் மாணவர்களை சேரும் எண்ணத்தை தூண்டும் பயிற்சியாக இப்பயிற்சி அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள் தேசிய மாணவர் படை அதிகாரிகள் மற்றும் பூம்புகார் கிராம பஞ்சாயத்தார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





▶ தமிழகம் முழுவதும் மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை நகர்புற நல்வாழ்வு மையத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி மூலமாக பல்வேறு இடங்களில் திறந்து வைத்தார். அதன் ஒரு பகுதியாக மாதவரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட, மாதவரம் தெற்கு பகுதி 25வது வட்ட கழகம் சார்பில், சென்னை, மாதவரம் முதல் தெரு, புக்ராஜ் நகரில் நகர்புற நல்வாழ்வு மைய திறப்பு விழா நடைபெற்றது. தமிழக முதல்வர் ஆணைக்கிணங்க மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம் அறிவுறுத்தலின்படி 3வது மண்டல குழு தலைவர் எஸ். நந்தகோபால் ரிப்பன் வெட்டி, குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார். இவ்விழாவில் முன்னாள் கவுன்சிலர் என். நெல்சன் மற்றும் திமுக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



▶ காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு தொகுதிக்கு உட்பட்ட குரும்பகரம் நடுத்தெரு பகுதியில் பதிமூன்று இலட்சம் செலவில் 600 மீட்டர் தூரம் சாலை அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையில் போக்குவரத்து துறை அமைச்சர் . சந்திர பிரியங்கா நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு சாலையின் தரம் குறித்தும் மற்றும் நடைபெரும் பணிகள் குறித்தும் விவரங்களை அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். இந்நிகழ்வில் இளநிலை பொறியாளர் அமிர்தலிங்கம் மேலும் கோவில் நிர்வாகிகள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உடன் இருந்தனர். மேலும் இப்பணி இரண்டொரு நாட்களில் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து விடப்படும் என இளநிலை பொறியாளர் தெரிவித்தார்.

# குத்தாலம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி நிகழ்ச்சி



குத்தாலம், ஜூன். 8-

மயிலாடுதுறை மாவட்டம், குத்தாலம் வட்டத்தில் 1432-பசலிக்கான வருவாய் கணக்குகள் சரிபார்த்தல் மற்றும் பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெரும் ஜமாபந்தி நிகழ்ச்சியானது மயிலாடுதுறை மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் அம்பிகாபதி தலைமையில் நடைபெற்றது.

குத்தாலம் வட்டாட்சியர் இந்துமதி முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆலங்குடி, திருமணஞ்சேரி, வானாதிராஜபுரம் உள்ளிட்ட 11 கிராமங்களை சேர்ந்த பொதுமக்களிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டது. மேற்படி ஜமாபந்தி நிகழ்ச்சியானது எதிர்வரும் 15.06.2023 வரை நடைபெறும் என்றும், இதில் அனைத்து கிராம பொதுமக்களும் தங்களுடைய குறைகளை மனுக்களாக அளித்து பயன்பெறலாம் எனவும் ஜமாபந்தி அலுவலர் அம்பிகாபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் குத்தாலம் சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியர் சண்முகம், குடிமை பொருள் வழங்கல் தனி வட்டாட்சியர் பிரான்ஸ் வா, மயிலாடுதுறை பேரிடர் மேலாண்மை தனி வட்டாட்சியர் காந்திமதி, சென்னை - கன்னியாகுமரி தொழிற்தட சாலை நிலை எடுப்பு தனி வட்டாட்சியர் சுந்தரம், மயிலாடுதுறை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர், தலைமை இடத்து துணை வட்டாட்சியர் பாபு, மண்டல துணை வட்டாட்சியர் ராஜன், நில அளவைப் பிரிவு வட்ட துணை ஆய்வாளர் சபரிநாதன் வருவாய் ஆய்வாளர்கள் பாலமுருகன், ஜெயந்தி, ஷர்மிளா கிராம நிர்வாக அலுவலர்கள் ராஜ்மோகன், சண்முகம் மற்றும் பிற துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# குமாரக்குடி ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்மன் கோயில் கும்பாபிஷேகம்





தரங்கம்பாடி, ஜூன். 8-

ஆக்கூர் அருகே காலமாநல்லூர் ஊராட்சி குமாரக்குடி கிராமத்தில் ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்மன் கோயில் கும்பாபிஷேகம் புதன்கிழமை நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, ஆக்கூர் அருகே காலமாநல்லூர் ஊராட்சி குமாரக்குடி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ விஷ்ணு துர்க்கை அம்மன் கோயில் கும்பாபிஷேகம் நடைபெறுவதை முன்னிட்டு திருப்பணிகள் நடைபெற்று முடிவடைந்த நிலையில் கடந்த 6-ஆம் தேதி யாகசாலை பூஜைகள் தொடங்கப்பட்டு புதன்கிழமை 2-ஆம் காலயாக பூஜைகள் முடிவடைந்தது.

தொடர்ந்து பூர்ணாகுதி, மகா தீபாரதனை நடைபெற்றது. காலை 10 மணிக்கு யாகசாலையில் இருந்து கடங்கள் புறப்பாடு செய்யபப்பட்டு. மங்கள வாத்தியம் மற்றும் சிவ வாத்தியம் முழங்க கோவிலை வளம் வந்து விமான கலசங்களை அடைந்தன. சிவாச்சாரியார்கள் விமான கலசங்களில் புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடத்தினர். தொடர்ந்து விஷ்ணு துர்க்கை அம்மனுக்கு பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனை நடைபெற்றது.

இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் மற்றும் கிராமவாசிகள் செய்திருந்தனர். பாதுகாப்பு பணியில் பொறையார் காவல்துறையினர் ஈடுபட்டிருந்தனர்.

சீர்காழியில் அமைக்கப்பட்ட சாலையின் தரத்தினை

# வெட்டிப் பார்த்து ஆய்வு செய்த மயிலாடுதுறை ஆட்சியர் மகாபாரதி அங்கன்வாடி மையத்திலும் ஆய்வு



சீர்காழி


மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அடுத்த சட்டநாதபுரம் ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அங்கு பயிலும் குழந்தைகளின் கல்வித்திறனை பரிசோதிக்கும் வகையில் குழந்தைகளிடம் ரைம்ஸ் என்னும் பாடல்களை பாட சொல்லி கேட்டறிந்தார். மேலும் மாணவர்களுக்கு வழங்க தயார் செய்யப்பட்ட உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்.

அங்கன்வாடி மையத்தில் சமைக்க பயன்படுத்தும் பருப்பு மற்றும் அரிசி தரமாக உள்ளதா எனவும் ஆய்வு செய்தார். தொடர்ந்து திருமலை நகரில் ரூபாய் 4 லட்சம் செலவில் அமைக்கப்பட்டு வரும் சாலையின் தரத்தினை ஆட்சியர் மகாபாரதி ஆய்வு மேற்கொண்டார். உரிய அளவீடு, தடிமனில் சாலை அமைக்கப்பட்டுள்ளதா என அமைக்கப்பட்ட சாலை ஊழியர்களைக் கொண்டு வெட்டிப் பார்த்து அதன் தரத்தை பரிசோதித்தார்.

ஆய்வின் போது ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள், வருவாய் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# தமிழகத்தில் மின் கட்டணம் உயர்த்தப்படாது – மின் வாரியம் தகவல்



சென்னை, ஜூன். 8-

மின் வாரியத்தின் நிதி நெருக்கடியை சமாளிப்பதற்காக, மின் கட்டணத்தை உயர்த்த அனுமதி கோரி, கடந்த ஆண்டு ஜூலை மாதம் மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம், மின் வாரியம் விண்ணப்பித்தது. அதனடிப்படையில், மின் கட்டணத்தை உயர்த்திக்கொள்ள ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி அளித்தது.

இதையடுத்து, வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணம் கடந்த செப்டம்பர் மாதம் உயர்த்தப்பட்டது. புதிய மின் கட்டணத்தை செலுத்த முடியாமல் மக்கள் அவதிப்பட்டனர். இதையடுத்து மீண்டும் மின் கட்டணத்தை உயர்த்த மின் வாரியம் திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வழங்கியுள்ள அனுமதியின் பேரில், அடுத்த மாதம் முதல் மின் கட்டணத்தை உயர்த்த மின் வாரியம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியானது. மின் கட்டண உயர்வு நுகர்வோரை கடுமையாக பாதிக்கும் என்பதால், மின் கட்டணத்தை உயர்த்தும் முடிவை கைவிட வேண்டும் என்று பொதுமக்கள் வலியுறுத்தினர்.

இந்த நிலையில், மின் கட்டணத்தை உயர்த்த கூடாது என பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும் வலியுறுத்தி வந்த நிலையில், ஜூலை மாதம் மின் கட்டணத்தில் எந்த மாற்றமும் இல்லை என்றும் தமிழகத்தில் மின் கட்டணம் உயர்த்தப்படாது என மின் வாரியம் விளக்கம் அளித்துள்ளது.

# காட்டுச்சேரி அருள்மிகு திரௌபதி அம்மன் கோயில் தீமிதி உற்சவம்



தரங்கம்பாடி, ஜூன். 8-

மயிலாடுதுறை மாவட்டம் பொறையார் அருகே காட்டுச்சேரி அருள்மிகு திரௌபதி அம்மன் கோயில் அக்கினி வசந்தப் பெருவிழா நடைபெற்றது.

காட்டுச்சேரி அருள்மிகு திரௌபதி அம்மன் கோயில் அக்னி வசந்தப் பெருவிழாவை முன்னிட்டு திருவிழா கடந்த மாதம் 22 ஆம் தேதி கொடியேற்றம் நடைபெற்றது. 5-ஆம் தேதி காலையில் துரியோதனன் படுகளம், கூந்தல் முடித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது, தொடர்ந்து மாலை 7 மணியளவில் கோயில் முன்பு அமைக்கப்பட்டிருந்த தீ குண்டத்தில் ஏராளமான பக்தர்கள் தீ மிதித்து தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

தொடர்ந்து அம்மனுக்கு பட்டு சாத்துதல், காப்பு அலங்காரம், மஞ்சள் காப்பு அலங்காரம்,மகாதீப ஆராதனையும், இரவு அம்மன் வீதியுலா காட்சி நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். இதற்கான ஏற்பாடுகளை விழா குழுவினர் மற்றும் கிராம மக்கள் செய்திருந்தனர்.



▶ காரைக்காலைச் சேர்ந்த சமூக சேவகியும், கவிஞர் அ. கனகவள்ளி கோவையில் இளந்தமிழ் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற உலக சாதனை நிகழ்வில். பங்கு கொண்டு பனைஓலையில் கவிதை எழுதினார்.. இவரது சாதனையை அங்கீகரித்து இவருக்கு சிகரம் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ் உலக சாதனை விருதையும்..சிறந்த கவிஞர் என்ற விருதையும் கொடுத்து கௌரவ படுத்தியது. அருகில் இளந்தமிழ் மன்றத்தின் தலைவர் அபிஷேக் மற்றும் சென்னை கலக்கல் கந்தசாமி உள்ளனர் .

# புதுக்கோட்டை ஆவுடையார்கோவில் தாலுகா கருப்பூர் கே.சி.சி கிளப் சார்பில் மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம்



ஆவுடையார்கோவில், ஜூன். 8-

ஆவுடையார்கோவில் அருகே கருப்பூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் வைகாசி விசாகத் திருவிழாவை முன்னிட்டு கருப்பூர் கே.சி.சி அணியினர் சார்பில் மாபெரும் மாட்டு வண்டி எல்கை பந்தயம் நடைபெற்றது. இதில் 90 மாட்டு வண்டிகள் பங்கேற்றது. இதில் பெரியமாடு, நடமாடு, புது பூட்டு ஆகிய பிரிவுகளில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு மாட்டுவண்டிகள் பங்கேற்றனர்.

போட்டியில் வெற்றி பெற்ற மாடுகளுக்கு சுமார் 2 லட்சம் ரொக்க பணமும், கேடயமும் வழங்கப்பட்டது. இந்த பந்தயத்தில் புதுக்கோட்டை, தஞ்சாவூர், சிவகங்கை, ராமநாதபுரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் இருந்து மாட்டுவண்டிகள் கலந்து கொண்டது. நிர்ணயிக்கப்பட்ட எல்கையை நோக்கி பந்தயத்தின் கலந்த மாடுகள் சீறிப்பாய்ந்தன சாலையின் இருபுறமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நின்று பந்தயத்தை கண்டுகளித்தனர்.

# கடல்சார் பாய்மரப்படகு சாகசப்பயணம் ,காரைக்காலுக்கு வந்த படகை மீண்டும் புதுவைக்கு கொடியசைத்து வழியனுப்பிவைத்த அமைச்சர், மாவட்ட கலெக்டர்




காரைக்கால், ஜூன். 8-

சமுத்திரபராக்கிரமம் - 2023 பாய்மரப் படகில் கடல் சாகசப் பயணம் புதுவையில் இருந்து காரைக்கால் சென்று மீண்டும் புதுவை திரும்புதல். ஜனவரி 2024 அன்று தில்லியில் நடைபெற உள்ள குடியரசு தின விழாவில் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு நடத்தப்படும் போட்டிகளில் ஒன்றான இந்த கடல் சாகசப் பயணம் குறித்த போட்டிக்கான நிகழ்வாக இந்த நிகழ்வு அமைக்கப்பட்டுள்ளது.

கடலூர் தமிழ்நாடு தேசிய மாணவர் படை கப்பல் படை பிரிவு மற்றும் புதுவை தேசிய மாணவர் கப்பல் படை மாணவர்கள் இணைந்து நடத்தும் இந்த கடல்சார் பாய்மரப்படகு சாகசப்பயணம் 02.06.2023 அன்று காலை 10.00 மணியளவில் புதுவையில் இருந்து முதல்வர் ந.ரங்கசாமி தொடங்கி வைத்தார். இதில் 25 மாணவிகள் உள்பட 60 தேசிய மாணவர் படை மாணவர்கள் (N.C.C.) கடல் சாகசப் பாய்மரம் படகு செலுத்தும் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். 302 கிலோ மீட்டர் தூரத்தை கடக்கவுள்ள (UP and down) இந்த பாய்மர படகு சாகசப் பயணம் புதுவையில் தொடங்கி கடலூர், பரங்கிப்பேட்டை, பூம்புகார் வழியாக காரைக்கால் துறைமுகம் வந்தடைந்தது.

மீண்டும் அதே வழியில் திரும்பும் நிகழ்வாக இது அமைக்கப்பட்டுள்ளது. இந்த கடல் சாகச பயணத்தின் ஐந்தாவது நாளான நேற்று இப்பாய் மர படகுகள் காரைக்கால் துறைமுகம் வந்தடைந்தது. இந்த கடல் சாகசப் பயணத்தில் தேசிய மாணவர் படை மாணவர்களின் பராக்கிரமத்தை வெளிப்படுத்த இடர்களை எதிர்கொள்ளும் திறன்களை பெறும் பயிற்சிகள் 2023 மே 23 ஆம் தேதி தொடங்கி 1 ஜூன் 2023 வரை கடலூர் பெரியார் கலைக் கல்லூரியில் நடத்தப்பட்ட முகாமில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

இந்த பயிற்சிகளுடன் கடற்கரையைத் தூய்மை செய்தல் போன்ற சமூக சேவை நிகழ்வுகளும் தீ தடுப்பு மேலாண்மை முதலுதவி அளித்தல் போக்குவரத்து விதிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.

நேற்று புதன்கிழமை காலை போக்குவரத்து துறை அமைச்சர் . சந்திர பிரியங்கா தலைமையில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், காவல் கண்காணிப்பாளர் (தெற்கு) திரு. சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் திரும்பவும் புதுவைக்கு செல்லும் பயணத்தை கொடி அசைத்து துவக்கி வைத்தார்கள். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் பயணிக்கும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த அனைவருக்கும் சால்வை அனுபவித்து வாழ்த்து தெரிவித்தார்கள். மேலும் இந்நிகழ்வில் பேசிய அமைச்சர், மக்கள் முதல்வரால் துவக்கி வைக்கப்பட்ட இந்நிகழ்வு பராக்கரம் என்றால் வலிமை என்று பொருள் கடல் சாகசத்தில் ஈடுபட்டுள்ள ஆண்களுக்கு நிகராக பெண்களும் இதில் கலந்து கொள்வது பெருமையாக உள்ளது.

மேலும் கடலில் 11 நாட்கள் பயணம் மேற்கொள்வது மழை தைரியத்தையும் அவர்களுடைய வீரத்தையும் காட்டுகிறது. இவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், இந்தப் பயிற்சியில் தேர்ந்த குழுவினருடன் இந்தப் பயணத்தில் லெப்டினன்ட் கமாண்டர் கு.கீர்த்தி நிரஞ்சன், லெப்டினன்ட் கமாண்டர் ச.லோகேஷ் ஆகிய இரண்டு கடற்படை அதிகாரிகளும் சப்-லெப்டினன்ட் கோபிநாதன், சப் லெப்டினென்ட் மனோகரன் சப் லெப்டினன்ட் சீனிவாசன் சீனியர் ஜி.சி.ஐ. மகேஸ்வரி ஆகிய 4 தேசிய மாணவர் படை இணை அலுவலர்களும் சீப் பெட்டி ஆபிஸர் ராஜசேகர் தலைமையிலான கப்பற்படை பயிற்றுநர்களும் இப்பயனத்தில் பங்கேற்றுள்ளனர்.

இவர்களுக்கு உதவியாக அவில்தார் அஜய்குமார் தலைமையிலான மருத்துவ குழுவினர் பயணம் மேற்கொள்கின்றனர். இப்பயணத்தில்மூன்றுபாய்மரப் படகுகளில் மாணவர்கள் பயணிக்கின்றனர். இந்த குழுவினர் தாங்கள் செல்லும் இடங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் ரத்ததான முகாம் மரம் நடுதல் கடற்கரை தூய்மைப் பணித்திட்டம் என பல சமூக சேவை சார்ந்த நிகழ்வுகளை நடத்தி உள்ளனர். தேசிய மாணவர் படை மாணவர்களின் உள்ளத் திறன் மேம்படுவதோடு கடல் பயணம் குறித்த அச்சம் நீங்கி ஆயுதப் படையில் மாணவர்களை சேரும் எண்ணத்தை தூண்டும் பயிற்சியாக இப்பயிற்சி அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சீர்காழி அருகே இறைதூதர் நபிகள் நாயகத்தின் வம்சா வழியினர் வழிபாடு

# சையது யாசின் மவுலானா தர்கா கந்தூரி விழாவில் லண்டன் துபாய் உள்ளிட்ட வெளி நாட்டினர் உட்பட பல்லாயிரகணக்கானோர் பங்கேற்பு





சீர்காழி, ஜூன். 8-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருமுல்லைவாசலில் இஸ்லாமியர்களின் இறை தூதர் நபிகள் நாயகத்தின் வம்சா வழி பேரன் ஜமாலியா சையது யாசின் மவுலானா தர்கா அமைந்துள்ளது.

தமிழகம் மற்றும் இலங்கை வாழ் முஸ்லிம்களின் ஆன்மிக குருவாக விளங்கிய இவர் இந்தியா மற்றும் கீழ்திசை நாடுகளில் இஸ்லாமிய ஆன்மிகத்தை பரப்பியவர். இறுதியாக மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே உள்ள திருமுல்லைவாசலில் 1964 ம் ஆண்டு நல்லடக்கம் செய்யப்பட்டார்.

அங்கு அவருக்கு தர்க்கா அமைத்து வழிபட்டு வருகின்றனர். ஆண்டு தோறும் யாசின் மௌலானா இறையடி சேர்ந்த தினமான கந்தூரி விழா நடைபெறவது வழக்கம். அதன்படி நடைபெற்ற விழாவில் தஞ்சை, சென்னை, புதுக்கோட்டை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்கள் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், இலங்கை, லண்டன், துபாய் உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும் மவுலானவின் கலிபாக்கள், சீடர்கள், பக்தர்கள் கலந்துகொண்டனர்.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான சந்தனக்கூடு வைபவம் விமர்சையாக நடைபெற்றது. சந்தன குடம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு சையது மவுலான சமாதியில் சந்தனம் பூசும் வைபவம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து சிறப்புத்துவா ஓதி வழிபாடு நடைபெற்றது.

மேலும் மத நல்லினக்கத்தையும் ஒற்றுமையையும் வெளிபடுத்தும் விதமாக அனைத்து மதங்களையும் சேர்ந்தவர்கள் உட்பட பல்லாயிர கணக்கானோர் பங்கேற்று வழிபாடு செய்தனர்.

# வேங்கம்பட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் மகா கும்பாபிஷேக விழா கோலாகலம்: ஏராளமான பக்தர்கள் தரிசனம்

பொன்னமராவதி, ஜூன்.8-

பொன்னமராவதி அருகே வேங்கம்பட்டி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் மகா கும்பாபிஷேக விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி தாலுகா ஒலியமங்கலம் ஊராட்சிக்குட்பட்ட வேங்கம்பட்டியில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ முத்து மாரியம்மன் கோவில் உள்ளது. இக்கோவிலில் திருப்பணிகள் நடந்து முடிந்ததை தொடர்ந்து 3 நாட்களாக பல்வேறு யாக சாலை பூஜைகள் நடந்தன. விழாவின் முக்கிய நாளான நேற்று காலை, 6.00 மணிக்கு கோ பூஜை, லெஷ்மி பூஜை, நாடிஸந்தானம், ஸ்பரிஷாஹீத், தீபாராதனை ஆகியவை நடைபெற்றது.

இதனை தொடர்ந்து காலை 9.30 மணியளவில் யாக சாலையில் மேள தாளம் முழங்க கடம் புறப்பாடாகி கோவிலின் விமான கோபுர கலசத்தின் மீது புனிதநீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போது அங்கிருந்த பக்தர்கள் மீதும் புனித நீர் தெளிக்கப்பட்டது. தொடர்ந்து முத்துமாரி அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், பூஜைகள் நடந்தன. இதில் வேங்கம்பட்டி, ஒலியமங்கலம், சுந்தம்பட்டி, காயாம்பட்டி, வெள்ளாளப்பட்டி, எழுவன் குறை, சேர்வைகாரன்பட்டி, வெட்டுக்காடு மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

விழாவையொட்டி பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது, விழாவில் கோயில் நிர்வாகிகள், இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர், நிகழ்ச்சியில் காரையூர் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர், இதைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற உள்ளது.

# ஆலங்குடி அருகே மல்லிகைபுஞ்சை செல்வவிநாயகர், வீராண்டாள் கோயில் கும்பாபிஷேக விழா

ஆலங்குடி ஜீன் 08;

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா வடகாடு ஊராட்சி மல்லிகைப்புஞ்சையில் உள்ள செல்வவிநாயகர், வீராண்டாள் கோயில் கும்பாபிஷேக விழா நடைபெற்றது.



செல்வவிநாயகர் மற்றும் வீராண்டாள் கோயில் திருப்பணிகள் முடிவுற்று கடந்த 2 நாட்களுக்கு முன்பு கணபதி ஹோமத்துடன் யாகசாலை பூஜை தொடங்கியது. இதைத்தொடர்ந்து அனைத்து கால பூஜைகளும் நிறைவுற்று, யாகசாலையில் வைத்து பூஜிக்கப்பட்டு வந்த புனித நீர்க்குடங்கள் மேளதாளத்தோடு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர், சிவாச்சாரியார்கள், வேதமந்திரங்கள் முழங்க கலசங்களில் புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில், மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் கலந்துகொண்டார். அவருக்கு ஊர் மக்கள் சார்பில் பரிவட்டம் கட்டி மரியாதை செலுத்தப்பட்டது. இதைத்தொடர்ந்து நூற்றுக் கணக்கானோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இரவில், தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரத்தை போற்றிய காலமா, வயல்வெளி காலமா, வாட்ஸ்அப் காலமா எனும் தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது.

# சங்கரன்கோவிலில் அமைக்கப்பட்ட 500 நகர்ப்புற நல்வாழ்வு மையங்களை முதல்வர் ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்

தென்காசி,ஜூன்.8-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் அமைக்கப்பட்ட ஐந்து மையங்கள் உட்பட 500 நகர்ப்புற நல்வாழ்வு மையங்களை தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலின் சென்னை மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். அதன்படி தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சிக்கு உட்பட்ட காவேரி நகர் நகர்ப்புற நல்வாழ்வு மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் துரைரவிச்சந்திரன், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினரும் தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா, தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார் ஆகியோர் காணொலி நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



சங்கரன்கோவில் காவேரி நகர் தென்காசி மங்கம்மாள் சாலை மேல கடையநல்லூர் இந்திரா நகர் முத்துகிருஷ்ணாபுரம் குமாந்தபுரம் மற்றும் புளியங்குடி அய்யாபுரம் ஆகியவற்றில் 1.25 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நல்வாழ்வு மையங்களில் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர் மற்றும் துணைப்பணியாளர் ஆகியோர் பணியமர்த்தப்பட்டுள்ளனர். நகர்ப்புற நல்வாழ்வு மையங்கள் காலை 8 மணி முதல் 12 மணி வரையிலும் மாலை 4 மணி முதல் 8:00 மணி வரையிலும் செயல்படும். மேலும் இந்த மையங்களில் அத்தியாவசிய மருத்துவ சேவைகள் பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசி பணிகளும் வழங்கப்படும்.நோயாளிகள் மருத்துவர்களை வானொலி மூலம் தொடர்பு கொண்டு சிகிச்சை பெறலாம் எனவே இந்த மருத்துவ சேவையை பயன்படுத்தும் மக்கள் நலம் பெறலாம் என கலெக்டர் துரைரவிச்சந்திரன் தெரிவித்தார். மேலும் நான்கு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகம் வழங்கப்பட்டது. தொடர்ந்து மரக் கன்றுகள் நடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் நகராட்சி ஆணையர் சபாநாயகம், யூனியன் சேர்மன் லாலா சங்கரபாண்டியன், நகர்மன்றத் தலைவர் உமா மகேஸ்வரி, துணை இயக்குனர் (சுகாதாரப் பணிகள்) முரளி சங்கர், மாவட்டப் பொருளாளர் சரவணன்,மாவட்ட துணைச் செயலாளர் புனிதா, ஒன்றியச் செயலாளர் பெரியதுரை, நகராட்சி கவுன்சிலர் வேல்ராஜ், நகரச் செயலாளர் பிரகாஷ், நகர் மன்ற உறுப்பினர்கள் கௌசல்யா, நிர்வாகிகள் பிரகாஷ், பாரதிராஜா, ஜெயக்குமார், வீரா, வீரமணி, சிவா மாணவரணி கார்த்திக், ஜான், சிவாஜி,மற்றும் வட்டார மருத்துவர்கள், சுகாதார பணியாளர்கள், செவிலியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஜெயங்கொண்டம் அன்னை தெரசா கல்வி நிறுவனங்களின் சேர்மன் முத்துக்குமரனுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருது



அரியலூர், ஜூன்.8-

ஜெயங்கொண்டம் அன்னை தெரசா கல்வி நிறுவனங்களின் சேர்மன் முத்து குமரனுக்கு, தமிழ்நாடு அரசு சார்பில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருது வழங்கப்பட்டுள்ளது.இது பற்றி அரியலூர்மாவட்டம் ஜெயங்கொண்டம் அன்னை தெரசா கல்வி நிறுவனங்களின் சேர்மன், முத்துக்குமரன் கூறியுள்ளதாவது,

தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேலாண்மை விருதுகள், ஜெயங்கொண்டத்தில் உள்ள அன்னை தெரசா கல்வி நிறுவனங்களின் சேர்மன் மற்றும் பரப்பிரம்மம் ஃபவுண்டேஷன் நிறுவனமான முத்துக்குமரனிடம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் மெய்யநாதன் சென்னையில் நடைபெற்ற விழாவில் வழங்கினார். அப்போது அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரிய செயலாளர் சுப்பிரியா சாகு உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

### தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் ஜூலை மாதம் நடைபெறும்

# தீப ஆரத்தி பெருவிழாவை முன்னிட்டு ஆலோசனைக் கூட்டம்



தென்காசி,ஜூன்.8-

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் ஜூலை மாதம் நடைபெறும் தீப ஆரத்தி பெருவிழாவை முன்னிட்டு நேற்று கடையநல்லூரில்ஸ்ரீ முண்டகக்கண்ணி அம்மன் அறக்கட்டளை நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

குற்றால நதியானது அகத்திய மலையில் உற்பத்தியாகி தென்காசி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பாய்ந்தோடி வங்காளக் கடலில் கலக்கிறது இத்தகைய குற்றாலம் நதியின் சிறப்பை பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த குற்றாலத்தில் அகில பாரதிய சந்நியாசிகள் சங்கம் மற்றும் ஸ்ரீ முண்டகக்கண்ணி அம்மன் அறக்கட்டளை சார்பில் ஜூலை மாதம் 21ம் தேதி முதல் 23ம் தேதி வரை தீப ஆரத்தி பெருவிழா நடக்கிறது. இதற்கான முன்னேற்பாடுகள் குறித்து நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது, கூட்டத்தில் முண்டகக் கண்ணி அம்மன் அறக்கட்டளை நிர்வாகிகள் கார்த்திக்ராஜா,கண்ணன், அருணாசலம்,பரமசிவன், ராமநாதன், வடிவேல், சேகர்பாண்டியன், செந்தில், முத்துகாமுத்துரை, முத்துராஜா, முத்துக்குமார், ரேவதி பாலீஸ்வரன், மங்கையர்க்கரசி ஒருங்கிணைப்பாளர் பாலீஸ்வரன், பாண்டித்துரை, மாரி, சுப்பிரமணியன், கார்த்திக், செல்வகுமார், சுப்பிரமணியன் என்ற குட்டி, நெடுவயல் முப்புடாதி, சிவராஜா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் இம்மாதம் 11ம் தேதி குற்றாலத்தில் வைத்து மடாதிபதிகள் தலைமையில் தீப ஆரத்தி குறித்த பத்திரிகையை வெளியிடுவது, தீப ஆரத்திக்கு தமிழ்நாடு, தெலுங்கானா, உள்ளிட்ட நான்கு மாநில ஆளுநர்களை அழைப்பது, தென்காசி சட்டமன்றத்திற்குட்பட்ட அனைத்து எம்எல்ஏக்களையும் அழைப்பது, அனைத்து கட்சிகளின் தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களை அழைப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### புதுக்கோட்டை ஆவுடையார்கோவில் தாலுகா கதிராமங்கலம்

# ஸ்ரீ செல்வவிநாயகர், ஸ்ரீகாளியம்மன், ஸ்ரீ சாம்பான் மற்றும் பரிவார தேவதைகளுக்கு மகா கும்பாபிஷேக விழா

ஆவுடையார்கோவில் ஜுன் 8

ஆவுடையார்கோவில் தாலுகாவில் உள்ள கதிராமங்கலம் கிராமத்தில் அமைந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ செல்வ விநாயகர், ஸ்ரீகாளியம்மன், ஸ்ரீ சாம்பாண் மற்றும் பரிவார தேவதைகளுக்கு கும்பாபிஷேக விழா நடத்துவது என கிராமத்தினர் முடிவு செய்தனர். இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது, அதனைத் தொடர்ந்து இரண்டு நாட்களாக மூன்று கால யாகசாலை பூஜைகள் நடைபெற்று வந்தது. விழாவின் முக்கிய நிகழ்வான நேற்று பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பெற்று பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம் புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது.



அதனை தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. முதலில் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்திற்கும் ,பிறகு ஸ்ரீ காளியம்மன் ஆலயம் மற்றும் அதன் அருகில் உள்ள பரிவார தெய்வங்களுக்கும், இறுதியாக ஸ்ரீ சாமான் மற்றும் அதனை சுற்றி இருக்கின்ற பரிவார தெய்வங்களுக்கும் கும்பாபிஷேகம் விழா சிறப்பாக நடைபெற்றது. அங்கு திரண்டு இருந்த மக்கள் மற்றும் ஆன்மீக மெய்யன்பர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்வுக்கு திருப்புனவாசல் போலீசார் பாதுகாப்பு பணியை ஈடுப்பட்டனர். கும்பாபிஷேக நிகழ்ச்சி கதிராமங்கலம் ஊர் தலைவர் மாரிமுத்து தலைமையிலும், கதிராமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன் முன்னிலையிலும் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# சித்தூர் அருகே ஆஞ்சநேயர் கோவிலில் சத்தியம் செய்ய பயந்து மாடியில் நகைகளை வீசி சென்ற திருடர்கள்

திருப்பதி,ஜூன்8-

கோவிலில் பொய் சத்தியம் செய்ய பொதுமக்கள் முன் வருவதில்லை. கிராம பெரியோர்கள் மற்றும் பொதுமக்கள் மீண்டும் கிடைத்த நகைகளை சாமி முன்பு வைத்து வழிபாடு செய்தனர்.



ஆந்திர மாநிலம் சித்தூர் அருகே புங்கனூர் அடுத்த ராஜா நாலா பண்ட கிராமத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற வீர ஆஞ்சநேயர் கோவில் உள்ளது. ஊருக்கே காவல் தெய்வமாக ஆஞ்சநேயர் விளங்குகிறார். இந்த கோவிலில் யாராவது பொய் சத்தியம் செய்தால் அவர்கள் வீடு திரும்பியவுடன் கடவுள் உரிய தண்டனை கொடுப்பார் என்பது மக்களின் நம்பிக்கையாக உள்ளது. இதே போல் ஏராளமானோர் பொய் சத்தியம் செய்து வீட்டிற்கு சென்றவுடன் இறந்தும், விபத்தில் படுகாயமடைந்து கை கால்களை இழந்தும் பல வழிகளில் இன்னல்களுக்கு ஆளாகியதாக கூறப்படுகிறது.

இதனால், கோவிலில் பொய் சத்தியம் செய்ய பொதுமக்கள் முன் வருவதில்லை. இந்நிலையில் கடந்த மாதம் 23-ந் தேதி புங்கனூர் அடுத்த மேலு பைலு கிராமத்தை சேர்ந்த நாகய்யா என்பவரின் மகனான வெங்கடர மணா வீட்டில் இருந்த தங்க செயின், மோதிரம் மற்றும் நெக்லஸ் ஆகிய நகைகளை மர்ம கும்பல் திருடிச் சென்றனர். இதனால் அதிர்ச்சி அடைந்த வெங்கடரமணா கிராமத்தில் உள்ள பெரியவர்களுக்கு தகவல் தெரிவித்து பஞ்சாயத்தை கூட்டினர். அதில், வீட்டில் ஒருவர் வீர ஆஞ்சநேயர் சாமி கோவிலில் சத்தியம் செய்ய வர வேண்டும் என ஆலோசனை நடத்தப்பட்டது.

பின்னர், கிராமத்தில் உள்ள அனைவரும் வரும் 9-ந்தேதி சத்தியம் செய்ய வர வேண்டும் என உத்தரவு போடப்பட்டது. இந்த நிலையில், தங்க நகைகளை திருடிச் சென்ற மர்ம கும்பல் வீர ஆஞ்ச நேயர் கோவிலில் பொய் சத்தியம் செய்தால் ஆபத்து ஏற்பட்டுவிடும் என கருதியுள்ளனர். எனவே வெங்கட ரமணா வீட்டின் மேல்மாடியில் திருட்டு நகைகளை வீசி விட்டு சென்றனர். நகைகள் அனைத்தும் மாடியில் இருப்பதை கண்ட வெங்கடரமணாவின் குடும்பத்தினர் ஊர் பெரியோர்களிடம் நடந்ததை கூறினர். கிராம பெரியோர்கள் மற்றும் பொதுமக்கள் மீண்டும் கிடைத்த நகைகளை சாமி முன்பு வைத்து வழிபாடு செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# நாட்டில் வகுப்புவாதம், மதவாதம் பாஜக ஆட்சியில் வேரூன்றி வளர்ந்துள்ளது : மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல்ராஜன்

மதுரை, ஜூன்.8-

மதுரையில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின்போது மக்கள் விடுதலை கட்சியின் நிறுவனரும், தலைவருமான முருகவேல் ராஜன் பேசியதாவது, நாட்டில் நிலவும் வகுப்புவாதம், மதவாதம் பாஜக ஆட்சியில் மதவெறுப்பு உணர்வு, கலாச்சாரம் வேரூன்றி வளர்ந்துள்ளது. மேலும் மத்தியில் உள்ள அரசு சில குறிப்பிட்ட தனியார் பெரும் முதலாளிகளிடம் ஒட்டுமொத்த இந்தியாவின் நலன்களையும், அந்நிய பொருளாதார ஆதிக்க சூழலை உருவாக்கி வருகிறது. நாட்டின் வேலை வாய்ப்பின்மை, விலைவாசி உயர்வு ஆகியவற்றால் நாட்டு மக்கள் துயரத்துக்கு ஆளாகி வருகிறார்கள்.



மக்கள் விடுதலைக் கட்சியின் சார்பாக வரும் 10.06.2023 சனிக்கிழமை அன்று மதுரை விரகனூர் சி.ஆர். மஹாலில் வலதுசாரி எதிர்ப்பு அரசியல் மா நாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் திமுக விவசாயி அணி மாநில செயலாளர் விஜயன், சி.பி.எம் மாநில செயற்குழு உறுப்பினர் வெங்கடேசன் எம்.பி, ஆதித்தமிழர் பேரவை தலைவர், நிறுவனர் அதியமான், இளம் சிறுத்தைகள் எழுச்சி பாசறை மாநில துணைச் செயலாளர் கார்த்திக், இந்திய தேசிய காங்கிரஸ் மாநில சிறுபான்மை நல வாரியத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், தந்தை பெரியார் திராவிடக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, அகில இந்திய பார்வர்டு பிளாக் தமிழ்நாடு பொது செயலாளர் கதிரவன், தியாகி இமானுவேல், பேரவை முதன்மைச் செயலாளர் வேல்முருகன், மருத நாட்டு மக்கள் கட்சித் தலைவர் ராஜ்குமார் மற்றும் இம்மாநாட்டில் ஏராளமானோர் பங்கேற்க உள்ளார்கள். இம் மாநாட்டில் முக்கியமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட உள்ளது என்பதையும் தெரிவித்து கொள்கிறேன் என்று மக்கள் விடுதலைக் கட்சித் தலைவர் முருகவேல் ராஜன் கூறினார்.

# சமூக வலைதளங்களில் ஒரு லைக் போட்டால் 200 ரூபாய் கிடைக்கும் என்று மக்களை மயக்கி நூதன மோசடி : தமிழ்நாடு சைபர் கிரைம் எச்சரிக்கை

சென்னை,ஜூன்.8-

சமூக வலைதளங்களில் நடந்து வரும் இந்த நூதன மோசடியில் ஏமாறாமல் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு தமிழ்நாடு சைபர் கிரைம் போலீசார் அறிவுறுத்தியுள்ளனர். இணையம் மூலம் பணம் செலுத்தி அதிக லாபம் பெறலாம் என ஒரு இலக்கை அறிமுகப்படுத்துகிறார்கள்.

சமூக வலைதளங்களான வாட்ஸ்அப், டெலிகிராம், இன்ஸ்டாகிராம், பேஸ்புக், யூடியூப் மூலம் குறுஞ் செய்திகள் அல்லது விளம்பரங்கள் வாயிலாக நிதி மோசடி அதிக அளவில் நடை பெறுகிறது. ஒரே ஒரு லைக் போட்டால் ரூ.200 கிடைக்கும் என்று மக்களை மயக்கி ஏமாற்றி நூதனமாக பணம் பறிக்கிறார்கள். சமூக வலைததளங்களில் நடந்து வரும் இந்த நூதன மோசடியில் ஏமாறாமல் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு தமிழ்நாடு சைபர் கிரைம் போலீசார் அறிவுறுத்தியுள்ளனர். இதுகுறித்து சைபர் கிரைம் போலீசார் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறி இருப்பதாவது, மக்களை சமூகவலை தளத்தின் மூலம் தொடர்பு கொண்டு ஏமாற்றும் சம்பவங்கள் தற்போது அதிகரித்துள்ளது. முதலில் சில யூடியூப் காணொலிகளுக்கு லைக் மற்றும் கமெண்ட் செய்வதால் நல்ல வருமானம் கிடைக்கும் என பொது மக்களை நம்ப வைக்கின்றனர்.



அதற்கு சிறிது பணமும் கொடுக்கிறார்கள்.

பின்னர், அவர்கள் அனைவரும் ஒரு டெலிகிராம் குழுவில் சேர்க்கப்பட்டு, சில ஓட்டல் பக்கங்கள், நிறுவனங்களுக்கு லைக் செய்ய சொல்லி அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கிடையில் இணையம் மூலம் பணம் செலுத்தி அதிக லாபம் பெறலாம் என ஒரு இலக்கை அறிமுகப்படுத்துகிறார்கள். அவற்றில் பிட்காயின், கிரிப்டோகரன்சி போன்றவற்றில் மக்களை முதலீடு செய்ய வைக்கின்றனர். இதற்கு பயனாளர் உள்நுழைவு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்கம் செய்கின்றனர். பொதுமக்களை நம்ப வைக்க, மோசடி நபர்கள், தாங்கள் ஏற்கெனவே இதில் முதலீடு செய்து நல்ல லாபம் பெற்றதைப்போல் போலியான ஆதாரங்களைக் காட்டுவர். இதை நம்பி பொதுமக்கள் முதலீடு செய்வர். முதலில் லாபம் வருவதைப்போல் உருவகம் செய்யப்பட்டு மக்களின் முதலீட்டுத் தொகை அதிகரிக்கத் தொடங்கியவுடன் பல்வேறு பொய்களைக் கூறி பண மோசடியில் ஈடுபடுகின்றனர். எனவே, சமூகவலைதளம் மூலம் அடையாளம் தெரியாத நபர்கள் அனுப்பும் குறுஞ்செய்திகளுக்குப் பதிலளிக்கவோ, லிங்க்கை தொடவோ, தொலைபேசி அழைப்பு அல்லது குறுஞ்செய்தி மூலம் பெறப் படும் கடவுச்சொல்லை யாருடனும் பகிரவோ வேண்டாம். 1930 என்ற உதவி எண்ணை 24 மணி நேரத்துக்குள் தொடர்பு கொண்டால் இழந்த பணத்தை விரைவில் மீட்டெடுக்க முடியும். நிதி இழப்பு அல்லாத பிற புகார்களுக்குwww.cybercrime.gov.in-ல் உள்நுழைந்து புகாரை பதிவு செய்யலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# 16 ஆயிரம் இதய அறுவை சிகிச்சைகளை செய்த டாக்டர் 41 வயதில் மாரடைப்பால் மரணம்

அகமதாபாத்,ஜூன்.8-

41 வயதில் 16 ஆயிரம் பேருக்கு வெற்றிகரமாக இதய அறுவை சிகிச்சை மேற்கொண்ட அவர், மாரடைப்பால் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



குஜராத் மாநிலம் ஜாம்நகர் பகுதியைச் சேர்ந்தவர் கவுரவ் காந்தி (41). இவர், இதய அறுவை சிகிச்சை நிபுணராக பணியாற்றிவந்தார். ஜாம்நகரில் மருத்துவம் பயின்ற இவர், அகமதாபாத்தில் இதய அறுவை சிகிச்சையில் நிபுணத்துவம் பெற்றார். இவர் தனது பணிக் காலத்தில் 16 ஆயிரம் இதய அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து உள்ளார். எனினும், செவ்வாய்க்கிழமை காலை மாரடைப்பால் இவர் உயிரிழந்தார். திங்கள் கிழமை இரவு நோயாளிகளுக்கு வழக்கம்போல் மருத்துவம் பார்த்துவிட்டு வீடு திரும்பிய அவர், இரவு உணவுக்குப் பிறகு படுத்து தூங்கியுள்ளார். காலை நீண்ட நேரம் ஆகியும் எழாததால், சந்தேகமடைந்த குடும்பத்தினர் அவரை எழுப்ப முயன்றுள்ளனர். ஆனால் அவர் எழுதிருக்கவில்லை உடனடியாக அவரை மருத்துவமனைக்கு கொண்டுசென்றுள்ளனர். அங்கு டாக்டர்கள் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்துள்ளனர். மாரடைப்பால் அவர் இறந்ததாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# கருணாநிதி நூற்றாண்டு விழா 5 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம் தொடக்கம்

# பட்டியலின மக்களை அனுமதிக்காத திரௌபதி அம்மன் கோவிலுக்கு சீல்





# லக்னோ நீதிமன்றத்தில் பிரபல ரவுடி சுட்டுக்கொலை


சென்னை / புதுக்கோட்டை | 08.06.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

08.06.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

டி. எஸ். இராமஸ்வாமி பிள்ளை , தமிழக அரசியல்வாதி (பி.1918) (இ.2006)



சுகார்த்தோ , இந்தோனேசியாவின் 2வது அரசுத்தலைவர் (பி.1921) (இ.2008)



இர. ந. வீரப்பன் , மலேசிய எழுத்தாளர் (பி.1930) (இ.1999)



## இன்றைய நினைவு நாள்

புதுக்கோட்டை சீனு , தமிழ்த் திரைப்பட நகைச்சுவை நடிகர், எழுத்தாளர் (இ.1951)



மதுரை மணி ஐயர் , தமிழக கருநாடக இசைப் பாடகர் (பி.1912) (இ.1968)



கே. கே. கத்யால் , இந்தியப் பத்திரிகையாளர் (இ.2016)



## உலக மூளைக்கட்டி நாள்

## உலகப் பெருங்கடல்கள் நாள்